தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி.பி.2014 | கன்னி - கசு (௨-10-83) | விலை 65 காசு — இதழ் எண் : 24 | பகுதி 39 - 42

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர்

முகுந்தனின் நேருரை

[ஆரவாரமில்லாது அமைந்த பேச்சு, ஆழ்ந்த அரிய சிந்தனைக் கருத்துவீச்சு - இவற்றின் கருவியாகவே முகுந்தன் அவர்களின் வாய் இயங்குகின்றது. வெளியில், யாரோ ஒரு எளிய பொது மாந்தர்போல் தோன்றும் இவரா இவ்வளவு தெளிவும் துணிவும் பெருமையும் வினைத்திறமும் பெற்ற தமிழ்மறவர் என்று நாம் வியப்படையவே முடிகிறது! அவரிடம் நேருரை கேட்டுத் தெளிவும் மகிழ்வும் பெற்றோம்! அவர்க்கும், அவர் தலைவராக இருந்தியங்கும் கழகத்திற்கும் எம் நன்றி!

—வழக்கறிஞர் -ப. அருளி

(1) கேள்வி : உங்கள் தலைமையின் கீழ் இயங்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) எப்பொழுது தொடங்கப் பெற்றது?

முகுந்தன் : 1979 - ஆம் ஆண்டின் பிற்பகுதியில்.

[2] கேள்வி : உங்கள் கழகத்தின் முகமையான முதல் குறிக்கோள் என்ன?

முகுந்தன் : தமிழ்ஈழத் தேசிய இனத்தின் விடுதலை.

[3] கேள்வி : நீங்கள் பொதுவுடைமைக் கொள்கையுடையவராகக் 'குல்தீப் நய்யார்' போன்ற சிறந்த செய்தியாசிரியர்களும், பிற இதழ்கள் சிலவற்றின் எழுத்தாளர்களும் தெரிவித்திருக்கிறார்களே! அப்படி நீங்கள் பொதுவுடைமைக் கொள்கையராக இருந்தால், அதை நீங்கள் இப்பொழுதே வலியுறுத்திக் கூறுவதன் நோக்கம் என்ன?

முகுந்தன் : நான் பொதுவுடைமைக் கொள்கையாளன் தான்! எங்கள் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் பொதுவுடைமைக் கொள்கையைக் கருவாகச் சுமந்து இயங்கும் கழகம் தான்!

ஆனால், எங்கள் கழகத்தின் முகமையான முதலான குறிக்கோளும் நோக்கமும் தமிழீழத் தேசிய இனத்தின் விடுதலையே! அந்த விடுதலைக்காகவே நாங்கள் இராப் பகலாய் உழைக்கிறோம்; படிப்படியாக அடிப்படையான வலிவும் வளர்ச்சியும் பெற்று வருகின்றோம்!

பொதுவுடைமைக் கொள்கையை நாங்கள் இப்பொழுதே வலியுறுத்திக் கூறுவதன் நோக்கத்திற்கு மூலமான காரணம் ஒன்றுண்டு. ஏனெனில், தமிழீழ நாட்டைப் பெறுவதற்கும், தமிழீழத் தேசிய இனம் முழுமையான விடுதலை பெறுவதற்கும், இன்றைக்குத் தங்களை முழுக்க முழுக்க ஒப்படைத்துக் கொண்டு இயங்குபவர்களும், துணையாயிருப்பவர்களும், உண்மையாகவே அது தேவையாயிருப்பவர்களும், உண்மையாகவே அதனைப் பெற்றே தீர வேண்டும் என்ற உளத்திண்மையும் வேட்கையும் பெற்றவர்களும், இன்றைக்கு எம் ஈழமண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் தொழிலாளிகளே!, நாளும் நையும்படியாகத் தம்மையே நலிவித்துக் கொண்டு துன்பத்திலும் துயரத்திலும் வறுமையிலும் உழன்று உழைத்துக் கொண்டேயிருக்கும் உழைப்பாளிகளே! அங்கு விடுதலைக்கு என்று ஈடுபடுவோரும் உழைப்போரும் பாட்டாளிகளே தவிர, பணக்காரர்களோ, பதவிநலம் துய்த்தவர்களோ அல்லர்!

அங்குள்ள பணக்காரர்களும், வணிகப் பெரும் புள்ளிகளும், அரசியல் தலைவர்களில் பலரும் தமிழ் ஈழத் தேசிய விடுதலையை நெஞ்சார விரும்பாதவர்களே! அதற்கென உண்மையான எந்தச் செயற்பாட்டுக்கும் இதுவரையிலும் எவ்வகையிலும் முறையான துணையையும் உழைப்பையும் தராதவர்களே! அவர்களும் ஈழவிடுதலையை விரும்புவதுபோல் இப்பொழுது கூறுகின்ற கூற்றுகள் மெப்புக்கும் மேலுக்கும் காலக்கட்டாயத்தினாலும் அங்குள்ள சூழலினாலும் வாயளவில் மட்டுமே பேசுகின்றார்கள்!



ஈழத் தமிழ் மண்ணின் உழைப்பாளிகளும் பாட்டாளிகளும் தொழிலாளிகளும் ஆகிய குமுகாயத்தின் [சமுதாயத்தின்] வறுமைப் பகுதியில் சிக்குண்டு கிடக்கும் அடித்தள மக்களே, போராட்டங்களில் பங்கெடுக்கிறார்கள்; தாக்குதலுக்குப் பலியாகிறார்கள்! அகதிகளாக அங்கும் இங்கும் அலைந்து பறக்கிறார்கள் உலகம் முழுக்கவும் தமிழ் ஈழ விடுதலை பற்றி இரக்கமும் பரிவும் ஒப்புதலும் தருகின்ற இப்பொழுதைய நிலை, ஈழமண்ணின் அந்த அடித்தள மக்களின் போராட்டங்களினாலும் பங்கெடுப்புகளினாலும் உயிரிழப்புகளினாலுமே உருவாகியிருக்கின்றது!

வெற்றுரையும் சூழ்ச்சியும் தன்னலமும் நிறைந்தவாறு தமிழினத்திற்கே இரண்டகமான [துரோகமான] ஓரிரு தலைவர்கள் அங்குள்ள சிங்கள இனவெறி அரசுக்கு உள்முகமான எடுபிடிகளாகவும், துணையாளர்களாகவும் இருப்பதை நாங்கள் தெளிவாக உணர்கிறோம். தமிழீழ மறவர்களும், தமிழீழத்தின் உழைக்கும் குடியினரும். சேர்ந்தியங்கி நாட்டைப் பெறப் போவது உறுதியினும் உறுதியாகவுள்ளது! நாட்டை மீட்டு விட்ட பின்னால், அந்நாட்டுத் தலைவர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் வழிநடத்துபவர்களாகவும் வருபவர் எவராயினும் அவர், அங்குள்ள உழைப்போரின் ஏழையரின், உண்மையான வாழ்க்கை விடுதலைக்கும் பொதுமைத் துய்ப்புக்கும் வழி செய்தாக வேண்டும். ஆனால், இன்றைக்கு அங்குள்ள சில முகமையான அரசியல் தலைவர்கள் ஆளவருவார்களாயின் கட்டாயம் அதனைச் செய்யமாட்டார்கள். அதே சமயத்தில், விடுதலை பெற்ற பின்னர், ஆக்கிய சோற்றுக்குப் பங்குக்கு வருவதுபோல அரசியல் ஆளுமையில் பங்கேற்று சூழ்ச்சியாக மக்களை ஏமாற்றிவிடத் தக்கவர்களாகவே அவர்கள் உள்ளார்கள்; அவர்கள் நடைமுறையும் செயலும் அவ்வாறே உள்ளன!

எனவே, உழைக்கின்ற அடித்தள மக்களாகிய அவர்களை, அரசியல் போலிகள் எளிதே ஏமாற்றி மறுபடியும் குழித்தள்ளிவிடக் கூடாது என்ற எச்சரிக்கையுணர்ச்சியை அம்மக்களுக்கும், பிறர்க்கும் உணர்த்துவதற்காகவே, இப்போதே முற்பாடாகவே நாங்கள் பொதுவுடைமைக் கொள்கை கோட்பாடுகளை வலியுறுத்திக் கூறவேண்டியவர்களாக உள்ளோம்.

தமிழீழ விடுதலையை மட்டுமே பெற்றுத் தருபவர்களாக எம் ஈழநாட்டு உழைப்பாளி மக்களை நாங்கள் கருதவில்லை; விடுதலை பெற்ற பின்னால், அந்த நாட்டையே மேலும் மேலும் உழைப்பால் உயர்த்தப் போகின்றவர்கள் அவர்கள்! எனவே, அவர்கள் தயவர்களாலும் சூழ்ச்சிநிறைந்த அரசியல் காரர்களாலும் ஏமாற்றுகளுக்கு உள்ளாகாமல் இருக்கவேண்டுமே என்ற கவலையும், அப்படிப்பட்ட மக்களுக்கு நல்ல அடிப்படையை அமைப்பதற்கான கடமையும் எங்களுக்கு இருக்கிறது!

கழகம் உருவாக்குவதற்கு முன்னரேயே, இவற்றையெல்லாம் தீர எண்ணித்தான் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்றவாறு பெயரையே உருவாக்கினோம்!

[4] கேள்வி : ஈழவிடுதலையை முன்வைத்து இயங்கும் கழகங்களிலேயே மிகப் பெரிய வலிவுள்ள கழகமாகத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைக் கட்டமைத்து இவ்வளவு அருமையாகச் செயல்படுகிறீர்களே, இதற்கு யார் யார் உங்களுக்குத் துணையாக இருக்கிறார்கள்?

முகுந்தன் : தமிழ்ஈழத்திலுள்ள எம் தமிழ் மக்கள்! அத் தமிழ் மக்களுள் உழைப்பாளிகளாகவும் தொழிலாளிகளாகவும் பாட்டாளிகளாகவும் உள்ள பெரும்பான்மையர் எங்களுக்குத் துணையாகவும் தூண்களாகவும் இருக்கிறார்கள்!

இவ்வளவு காலமும், தமிழார் விடுதலைக் கூட்டணி அவர்களுக்குரிய விடுதலையைப் பெற்றுத் தரும் என்று நம்பினார்கள்! பலரும் துணையிருந்தார்கள்! நாள் செல்லச் செல்ல, அவ்வியக்கத்தின் தலைமையாளர்களின் வெற்றுத் தன்மையும், கொள்கை நெகிழ்ச்சியும், தமிழின மக்களுக்கே செய்து வந்த உள்முகமான இரண்டகங்களும் [துரோகங்களும்]. அம்மக்களுக்கு தெரியத் தொடங்கிவிட்டன. எனவே, அவ்வியக்கத்தையும் அதன் தலைமையையும் தூக்கி எறிந்து தூரத் தள்ளி விட எண்ணினர்; பதவிநலத் துய்ப்பில் பழகி வாழ்ந்து வந்த அவர்களை ஒன்றும் செய்ய இயலவில்லை; அப்போது, மக்கள் நலம் கருதிய தூய்மை

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் அன்றைய தெளிவும், இன்றைய தளர்வும்! (அல்லது, நெளிவும்!)

ஒப்பிட்டுக்கென மீண்டும் எண்ணுவோம்!

அண்மையில் இலங்கை மண்ணில் பேரளவில் நடத்தப்பெற்ற இனப்படுகொலைகளை அடுத்து, இந்தியாவுக்கு மீண்டும் மீண்டும் வருகைபுரிந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இந்திய நாட்டுச் செய்தியிதழ்கள் பலவற்றுக்கு, அங்குள்ள நிலைமைகளை விளக்கும் வகையில் நேருரைகள் (பேட்டிகள்) தந்தார்!

தமிழகத்திலின்று வரும் செய்தியிதழ்களில் வெளிவந்துள்ள அவரின் அண்மைக்காலக் கருத்துரைகளில், எவ்வளவு தளர்ச்சிகளும் பின்வாங்குதல்களும், அடக்கவொடுங்குதல்களும், கொள்கை நெகிழ்வுகளும் நழுவுதல்களும் உள்ளன என்பதைத் தமிழன்பர்கள், ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து தெளிவதற்குத் துணையாக, திரு. அமிர்தலிங்கம் அவர்கள் [1978-மே மாதம் 22-ஆம் நாளன்று, இலங்கையிற் பாவலரேறு ஐயா அவர்களுக்கு அளித்த நேருரை (தென்மொழி-சுவடி: 15: ஓலை-1-இல் வெளி வந்தது) இக்கால் இங்கு வெளியிடப் பெறுகிறது!

கொள்கையளவில் தெளிவும், ஈழத்தை விடுதலையாக்கி மீட்டெடுக்கவேண்டும் என்ற உண்மை யுணர்வும், தன்னலமற்ற தன்மையும், வெளிப்படையான உரையும் ஒரு காலத்தில் திரு அமிர்தலிங்கம் அவர்களிடம் இருந்தன! இவ்வளவு கொடுமைகளும் நடந்த பின்னர், தலைமைக்கு இருக்க வேண்டாத கொள்கைச் செயலாண்மைக் குறைபாடும் நழுவுகைப்பண்பும் கொண்டு அவர் இயங்கியமை மெய்த் தமிழன்பர்களுக்குப் பெரிய வருத்தத்தையே உருவாக்கியுள்ளது!

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு செய்தித்தாள் நிறுவனத்திற்கும் தாமே வலிய வலியச் சென்று, அந்தந்த இதழின் மேலாளரையும் உரிமையாளரையும் கண்டு நன்றி தெரிவித்தார் என்பது போலும், வேண்டாத செயல்கள் — தலைமைக்குரிய பெருமைக்கு ஒரு பெரிய இழுக்கைத் தருவதாகவும், அவருக்கு இக்கால் வந்துற்றிருக்கும் விளம்பரவுணர்வைக் காட்டுவதாகவும் இருந்தது!) தலைவராக, உள்ள இவரைத் தேடி அவர்கள் வந்து செய்தியறிவதற்குப் பகரமாக (பதிலாக) இவரே சென்ற வெற்றுவேலை, இவரின் செயல்பாட்டுக் குறைபாட்டுக்கு ஒரு சான்றாகும்!

கடந்த 30 ஆண்டுகளாகச் சிங்கள இனவெறியரசாலும் காடையர்களாலும் பல்லாயிரம் தமிழ்மக்கள் அடித்துக் கொல்லப்பெற்றனர். தமிழர்களின் கோடிக்கணக்கான பெறுமதிச் சொத்துகள் சிங்களவரால் கொள்ளையிடப்பெற்றன! இலக்கக் கணக்கானவர் அகதிகளாகி அல்லலுற்றனர்!

ஆனால், நேருரை தரும் அமிர்தலிங்கத்தின் மனம் எப்படியுள்ளது?

'இன்னொரு தடவை அப்படியான இனவெறியாட்டம் தொடங்கும் என்றால், நான் துணிவோடு சொல்லுவேன், இந்திய அரசின் கடமையே, படைத்துறையை அனுப்பி, எங்களைப் பாதுகாப்பதுதான் என்றே சொல்லுவேன்!'

'இன்னொரு தடவை இப்படி நடந்தால்,..... இவ்வாறு விடை சொல்வதில் எவ்வகையான நழுவல் அமைந்திருக்கிறது என்று சற்றே எண்ணிப் பாருங்கள்! இம்முறை மட்டும்தான் அப்படி அமைந்துள்ளது என்றால், ஒருவேளை அவரின் இப்படிப்பட்ட கருத்துத் தெரிவிப்பு ஓரளவுக்கு நயன்மையுடையதாக இருக்கலாம்!

ஒரே தடவையில் மட்டுமா, இப்படிப்பட்ட கொடுஞ்செயல்கள் நடந்து முடிந்தன! ஆண்டுக்கு ஆண்டு வரும் பருவமழைபோல், ஆண்டுக்கு ஆண்டு படுகொலை செய்யப்பட்டு பிணக்குவியல்கள் அழுகிக் கிடக்கும் ஒரு நாட்டின் தமிழர்தலைமை இவ்வாறு குழைந்து பணிவதும், அடுத்தமுறையில் பார்த்துக்கொள்ளலாம் என்பதுபோலும் காலத்தைப் பயனபடுத்திக்கொள்ளும் காலமறிதல் தெளிவில்லாத, தள்ளிப்போடும் நெடுமைப் பண்பும், மிகவும் வருத்தத்திற்கு உரியன!

மெய்யாகவே சொன்னால், அரிய இப்பொழுதைய தமிழர் எழுச்சியைத் தணித்து அடக்கும் உரைகள் எவற்றையும் தமிழ் இனத்திற்கே செய்யும் இரண்டக வினைகள் என்றே நாங்கள் கருதுகின்றோம்!

இனி இங்குள்ள பழையதை நினைவு கூர்வோம்! புதுமைகள் பூக்கவும் புரட்சிகள் ஓங்கவும் நடையிடுவோம்! பொய்யர்கள் உரைக்குத் தடையிடுவோம்! போலிகள் குழைவுகளைப் புறக்கணிப்போம்! புன்மைகள் அகல வினைபுரிவோம்! விடுதலை யுணர்வுக்குத் துணை புரிவோம்!

(உறுப்பாசிரியர்)

ஆசிரியர் அவர்கள் : எதிர்க்கட்சித் தலைவர் என்கின்ற முறையில் உங்களிடத்தில், தென்மொழிச் சார்பாகச் சில விளக்கங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். எனவே நீங்கள் அறிந்தவரை விடைகள் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

(1) இலங்கையில் இப்பொழுது ஈழத் தமிழர்களின் நிலை எப்படி இருக்கின்றது?

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் : இலங்கையில் அடிமை இனமாக இருக்கின்ற ஈழத்தமிழர்கள் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் மிகவும் தாக்குதலுற்ற (பாதிக்கப்பட்ட) மக்களாக இருக்கின்றனர். அரசியலில் அடிமைத்தனம் ஏற்பட்ட பின்பு அவர்களுடைய பொருளியலடிப்படை, அவர்களுடைய கல்வி, அவர்களுடைய கலை என்னும் அவர்களுடைய வாழ்வின் ஒவ்வொரு துறையும் தாக்குதலுற்றுள்ளது. இன்று, இறுதியாக அவர்கள் உயிர்வாழ்வதற்கே உரிமையற்ற ஓர் இனமாக, செல்லும் இடத்தில் எல்லாம் தாக்கப்படக்கூடிய மக்களாக, தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் உரிமைகூட அற்ற ஓர் இனமாக ஆக்கப்பட்டுள்ளனர்.

(2) ஆசிரியர்: இப்பொழுது 'தமிழ் ஈழ விடுதலை இயக்கப்புலிகள்' என்று ஓர் இயக்கம் இருப்பதாக அரசு அறிவித்துள்ளதே, அதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் உங்கள் கருத்து என்ன?..

அமிர்: விடுதலை இயக்கப் புலிகள் என்று ஓர் இயக்கம் இருக்கிறதோ, இல்லையோ, எங்களுக்கு அதுபற்றி எதுவும் தெரியாது. ஆனால் விடுதலை ஆர்வம் கொண்ட இளைஞர்கள் தமிழ் ஈழத்தில் நிறைய இருக்கின்றார்கள், அவர்கள், தங்களை ஒப்படைத்து (அர்ப்பணித்துக்) கொண்டு இனவிடுதலைக்காக உழைக்க ஆயத்தமாக இருக்கின்றார்கள் என்பதை மாத்திரம் நான் திட்டவட்டமாகக் கூறுவேன்.

(3) ஆசிரியர்: அப்படியானால், இப்பொழுது நடைபெற்று கொண்டு வருகின்ற முயற்சிகள் இவ்வகையில் அஃதாவது, நேரடியாகவோ, மறைமுகமாகவோ தமிழ் ஈழத்தைப் பெற்றுத்தரும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

அமிர்: உறுதியாக (நிச்சயமாக)! நாம் தமிழீழத்தைப் பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு இப்பொழுது நாம் செய்துகொண்டு வருகின்ற முயற்சிகள் அதற்குப் போதுமானவையா என்பது பற்றி நான் கூறமுடியாது. எங்களுடைய தமிழீழக் கோரிக்கை, 76-ஆம் ஆண்டு நாம் எடுத்த தீர்மானம்,77-ஆம் ஆண்டு நடத்திய பொதுத் தேர்தலில் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத் தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு நாம் இப்பொழுது பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

(4) ஆசிரியர் : அஃது என்ன தீர்மானம்?

அமிர் : அதற்கு முன்பு 76-ஆம் ஆண்டு மே-இல் தமிழர் கூட்டணியின் முதலாவது மாநில மாநாடு வட்டுக்கோட்டையில் நடை பெற்ற பொழுதுதான் தமிழர் கூட்டணியாகவிருந்த இயக்கத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றியமைத்து, எங்கள் குறிக்கோளை "முழு(பூரண) இறைமையுள்ள தமிழ் ஈழத்தை'' நிறுவுவதென்று நாம் தீர்மானித்தோம். அதற்கு முன்பு சிலர் அப்படித் தனிநாடாக அமைய வேண்டுமென்று கூறிக்கொண்டு இருந்த போதிலும் பெரும்பாலான தமிழ் மக்களோ, தமிழ் மக்களுடைய இயக்கங்களோ அந்தக் கொள்கையைக் கொண்டிருக்கவில்லை:

'76 மே-14-இல் நடைபெற்ற எங்கள் முதலாவது மாநாட்டிலே நாங்கள் எடுத்த முடிவுதான் தமிழ் ஈழம் என்ற தனி நாட்டை இலங்கையில் நாம் அமைக்க வேண்டும் என்பது! அதற்கு. நாம் மக்களின் ஒப்புதலை (அங்கீகாரத்தை)ப் பெறுவதற்குத்தான், 77 ஆடி மாதத்தில் நடைபெற்ற தேர்தலை நாம் ஒரு கருவியாகப் பயன்படுத்தினோம் மக்களைத் தமிழீழ நோக்க (இலட்சிய)த்திற்காக ஒப்புதல் (வாக்கு) அளிக்கும்படி கேட்டோம். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழீழத்தின் நிலப்பரப்பில் உள்ள 19 தமிழ்த் தொகுதிகளுள் 18 தொகுதிகளில் நாம் வெற்றி பெற்றோம். ஒரே ஒரு தொகுதியில் மாத்திரம் இன்றைய ஆளுங்கட்சி 500 பெரும்பான்மை ஒப்போலை (வாக்கு)களால் வெற்றி பெற்றது. இந்த 18 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றதில் இருந்து தமிழ் ஈழமக்கள் மிகப் பெரும்பாலோர் தனித் தமிழ் ஈழம் அடைவதை-ஒரு தன்னுரிமை (சுதந்திர)த் தமிழ் ஈழம் அடைவதை விரும்பியிருக்கின்றார்கள் என்பது தீர்மானமாகி விட்டது. அந்த அடிப்படையில்தான் பாராளு மன்றம் கூட்டப்பட்டவுடன் முதலாவது கூட்டத்திலேயே நான் ஒரு தீர்மானத்தைப் பாராளு மன்றத்தில் கொண்டு வர இருந்தேன். அந்தத் தீர்மானம் முன் மொழிய இருந்த அன்றே இலங்கையில் ஓர் இனக்கலவரம் வெடித்தது. தமிழ் மக்கள் எல்லா இடங்களிலும் தாக்கப்பட்டும், நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டும், ஆயிரக்கணக்கான மக்கள் படுகாயமடைந்தும் பலகோடி பெறுமதியான, ஏறத்தாழ எனது மதிப்பீட்டின்படி நூறுகோடி உருபாவுக்கு மேலாகத் தமிழ் மக்களின் சொத்துகள் சூறையாடப்பட்டும், தீக்கிரையாக்கப்பட்டும் அழிக்கப்பட்டன. எங்கள் பெண்கள் பலர் கற்பழிக்கப்பட்டனர். இந்த வகையான தாக்கம் தமிழ்ஈழத் தீர்மானத்தை நாங்கள் பாராளுமன்றத்தில் ஒப்புவித்த (சமர்ப்பித்த) அன்றே ஏற்பட்டது. ஆனால் அது அந்தத் தீர்மானத்தினால் ஏற்பட்ட தாக்கமன்று. முன் கூட்டியே திட்டமிட்டுத் தமிழ் இனத்தைப் படுகொலை செய்யும் திட்டமென இது எனக்குத் தோன்றுகிறது. அந்தக் கலவரத்தின் பின்பு தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் சிங்களப் பகுதிகளில் இருந்து ஏதிலி (அகதி)களாகத் தமிழ் ஈழத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு வாழ்வு கொடுக்கும் வேலைகள் இன்னும் நிறைவெய்த வில்லை. அவர்களுக்குத் தமிழ்ஈழத்தில் நிலங்களைக் கொடுத்து வீடுகளை அமைத்து அவர்களுக்குத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களை வாழ வைப்பதில் பல்வேறு இயக்கங்கள் ஈடுபட்டு வருகின்றன. அதே நேரத்தில் சென்ற இனக்கலவரத்திலே தமிழ் ஈழத்தில் வாழ்ந்த தமிழர்களும் தாக்கப்பட்டனர்: அரசின் காவல் படையினரால் தாக்கப்பட்டனர். அவர்களினால் ஏவிவிடப்பட்ட அண்மையில் தமிழ்ஈழத்தில் வந்து குடியேறிய சிங்களவர்களாலும் அவர்கள் தாக்கப்பட்டனர்.

இத் தாக்குதல்களிலிருந்து நாங்கள் கற்றுக் கொண்ட ஒரு பாடம் என்னவென்றால், எங்களுடைய மண்ணில் எங்கள் மக்களைப் பாதுகாப்பதற்கு நாம் வழிவகைகளை உடனடியாகத் தேட வேண்டும். இத் தாக்குதல்களின் கரணியமாக எங்கள் இளைஞர்களில் ஒரு பகுதியினர் மிகத் தீவிரமாக இயங்க முற்பட்டதில் வியப்பு (ஆச்சரியம்) இல்லை. தன்மானமுள்ள எந்த இனத்திலுமுள்ள இளைஞர்களும் இந்த வகையான தீவிரமான செயலில் இறங்குவது இயற்கையானதெனவே நான் கருதுகின்றேன்.

(5) ஆசிரியர்: இப்பொழுது கேட்கப் போகிற கேள்வி உங்களுக்குக் கொஞ்சம் புதுமையாகவும், அதேபொழுதில் வியப்பாகவும் கூட இருக்கலாம்.

ஒரு காலத்திலே தமிழகத்தில் தமிழ் நாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்று அங்கு இருந்த தலைவர்கள் சிலர் முற்பட்டார்கள். அதை ஓர் இயக்கமாகவும் நடத்தினார்கள். பிறகு நாளாக அரசியலிலே அவர்கள் பங்கு கொண்ட அந்த அடிப்படையில் அவர்கள் அந்தக் கொள்கையையே கைவிட வேண்டியதாக இருந்தது. அதுபோல ஒரு காலத்தில் நீங்களும் உங்கள் கோரிக்கையிலிருந்து சிறிது தளர்ந்து, தமிழ்ஈழம் கிடைக்காமற்போனாலும், தமிழ் மக்களுக்கு ஏதாவது ஒரு சமநிலை வாய்ப்புக் கொடுத்தால் போதும் என்கின்ற ஒரு கொள்கைக்கு நீங்கள் இறங்கிவிட மாட்டீர்கள் என்பதற்கு ஏதாவது உறுதியான நம்பிக்கை உங்களிடம் இருக்கிறதா?

அமிர்: இந்தியாவில் இருக்கிற நிலைமை வேறு இலங்கையில் இருக்கின்ற நிலைமை வேறு இந்தியாவில் தமிழ் நாட்டுமக்கள் இங்கு நாம் அடைகின்ற சிறுமையை அங்கு அடையவில்லை. தமிழ்நாட்டிலாவது அவர்கள் தன்மானத்துடன் ஓர் அளவிலாவது வாழக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். இங்கு எமக்கென்று ஒரு நாடில்லை. எமது நிலமென்று கூறுகின்ற நிலப் பரப்பிலேயே திட்டமிட்டுச் சிங்களவல்லாளுமை (ஆக்கிரப்பு) - சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருகின்றது. ஆட்சியாளர்களின் நெருக்கடிகளே, ஆளும் இனத்தினுடைய முறைகேடு (அக்கிரமங்)களே எங்களை இந்தத் தமிழ்ஈழ நோக்க (இலட்சிய)த்திலிருந்து போகவிடாது தடுத்து நிற்கின்றது. என்பது எனது உறுதியான நம்பிக்கை. ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் நாம் தமிழ் ஈழத்தைத்தவிர வேறுபாதை இல்லை என்று முடிவுக்கே தள்ளப்பட்டிருக்கிறோமே தவிர அதை நாங்கள் மீள ஆய்வு செய்வதற்கு எந்த வகையான இடமும் இல்லை.

(6) ஆசிரியர் : மகிழ்ச்சி. இப்பொழுது உள்ள முயற்சிகள் தமிழ் ஈழத்தைப் பெற்றுத்தரும் என்று நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா?

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பு

UNIVERSAL DECLARATION OF HUMAN RIGHTS

தோற்றுவாய்

மக்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் இயல்பாக அமைந்துள்ள பெருமையும், மாற்றவே முடியாத சரிநிகர் சம உரிமைகளும் இவையெனத் தெளிதலே உலக விடுதலைக்கும், நேர்மைக்கும், அமைதிக்கும் அடிப்படையாதலாலும்,

மக்கள் உரிமைகளைப் புறக்கணிப்பதும், மறுப்பதும காட்டு விலங்காண்டிச் செயல்கள் விளைவதற்குக் காரணமாவதோடு அமையாமல் மக்களுடைய மனச் சான்றையும் கொதிக்குமாறு செய்துவிடுதலாலும், பேச்சுரிமை சமயக் கோட்பாட்டுரிமை, அஞ்சாமை உரிமை, வாழ்க்கைத்தேவை உரிமை இவற்றைத் தடையின்றிப் பெற்று இன்புறுவதற்கு ஏற்ற ஒரு புத்துலகத்தைத் தோற்றுவிப்பதே பொதுமக்களுடைய பெரு வேட்கையாதலாலும்,

கொடுங்கோன்மை, அடக்குமுறை இவற்றை எதிர்த்துப் புரட்சிக் கலகம் செய்வதன்றி வேறு வழியில்லை யென்று. துணியும் நிலையை ஒருவருக்கு ஆக்கக் கொடாது இருக்க வேண்டுமானுல் மக்களுடைய உரிமைகளைத் தக்க சட்டங்களின் மூலம் பாதுகாத்தல் இன்றியமையாது வேண்டப்படுதலாலும்,

பல்வேறு நாடுகளுக்கிடையே கேண்மையை வளர்த்து அவற்றை உறவு நாடுகளாக்குதல் இன்றியமையாது வேண்டப்படுதலாலும்,

மக்களுடைய அடிப்படை உரிமைகளிலும், தனி ஒருவருடைய பெருமை, தகுதி இவற்றிலும், ஆண் பெண் இவர்களின் சரிநிகர் சமஉரிமைகளிலும் தமக்குள்ள நம்பிக்கையைத் தாம் வழங்கிய உலக அறிவிப்பில் ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் உறுதிப்படுத்தி உள்ளமையாலும், குமுக முன்னேற்றம் வாழ்க்கைநிலை இவற்றை மேலும் மேலும் உரிமை நல்கி உயர்த்துவதாக அவர்கள் துணிந்து உள்ளமையாலும்,

மக்கள் உரிமைகளையும் அடிப்படை விடுதலைகளையும் வழங்கும் முறைகளைக் கடைபிடிக்க, உறுப்பு நாடுகள் ஒன்றிய நாடுகளோடு ஒத்துழைக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டுள்ளமையாலும்,

இந்த உறுதி மொழியை முழுமையும் நிறைவேற்றி வைக்க மக்களுக்குரிய உரிமைகளும், விடுதலைகளும் இவை இவையென எல்லோரும் ஒரே வகையாக அறிந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாது வேண்டப்படுதலாலும்,

பொதுப் பேரவை (GENERAL ASSEMBLY)

பல்வேறு வகைப்பட்ட இனத்தவர்களும் பல்வேறு வகைப்பட்ட நாடுகளும் தம் தம் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்ற வகையில் துணை செய்யும் ஆற்றல் அமைந்த ஒரு சிறந்த கருவியாக மக்கள் உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பை எப்பொழுதும் நினைவில் இருத்திக் கொண்டு ஒவ்வொரு குமுகத்திற்கும் உறுப்பாக அமையும் தகுதி பெற்ற ஒவ்வொருவரும், அறிவுறுத்தலாலும், பயிற்சிகொடுத்தலாலும், தனி, அனைத்துநாட்டு இயல், இரண்டிற்கும் ஒத்த முன்னேற்ற முறைகளை நடைமுறைக்குக் கொண்டு வருதலாலும், மக்களுக்குரிய உரிமைகளையும், விடுதலைகளையும் குறித்த நன்மதிப்பைப் பெருக்கி, உறுப்பு நாடுகளின் குடிகளும்; அவற்றின் ஆட்சிக்குட்பட்ட குறுநிலக் குடிகளும் மக்களும் உரிமை விடுதலை இவற்றின் பயன்களை நன்றாக அறிந்து அவற்றைக் கடைப்பிடிக்கும் நிலையை ஏற்படுத்தல் வேண்டுமென்று அறிவிக்கின்றது.

பிரிவு 1. பிறப்பாலும் பெருமையாலும் உரிமையாலும் மக்கள் எல்லோரும் ஒத்த நிலையுடையவர்களே. அவர்கள் இயற்கையிலேயே பகுத்தறிவும் மனச்சான்றும் பெற்றுள்ளார்கள். அவர்கள் ஒருவரோடருவர் உடன்பிறப்பு உணர்ச்சியோடு பழகல் வேண்டும்.

பிரிவு 2.—(1) மேற்படி உலக அறிவிப்பில் கண்ட உரிமைகளும் விடுதலைகளும் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உடைமைகளாகும், இனம் நிறம், பால், மொழி, சமயம் அரசியல்—கொள்கை, அல்லது பிறவகைக் கொள்கை, பிறந்த நாட்டியல்பு அல்லது பிறந்த குமுக இயல்பு காரணமாக அமையும் சிறப்பு, வளம், குடிபிறப்பு அல்லது பிறவகைச் செல்வாக்கு இவற்றில் ஒன்றையும் கருதாமல் மேற்படி உலக அறிவிப்பில் அடங்கிய எல்லா வகையான உரிமைகளும், விடுதலைகளும் மக்களாகப் பிறந்த எல்லாருக்கும் பொதுவுடைமைகளாகும்.

(2) நிறம், ஆண் பெண் வேற்றுமை மொழி, சமயம் காரணமாக அல்லது அரசியல் தொடர்பான அல்லது வேறுவகையான கருத்துக் காரணமாக, அல்லது இன்ன தேசத்தில் அல்லது இன்ன குமுகாயத்தில் இருந்து வந்தமை காரணமாக அல்லது பிறப்புக் காரணமாக, அல்லது வேறேதும் தகுதி காரணமாக எவ்வகையான வேறுபாட்டுணர்ச்சியும் இல்லாது அனைத்து உரிமைகளையும் விடுதலைகளையும் துய்ப்பதற்கு (அனுபவிப்பதற்கு) ஒவ்வொருவரும் உரிமை உடையவராவர்.

மேலும், ஒருவருடைய தேசம் அல்லது ஊர் விடுதலையுடையதாயினும் சரி, அதன் முழு நிறை விடுதலைக்கு எவ்வகையான கட்டுப்பாடுடையதாயினும் சரி, அதனுடைய அரசியல் நிலைமையையேனும் அனைத்துத்தேசிய நிலைமையையேனும் கொண்டு அதன் மக்களுக்கிடையே பாகுபாடு செய்யப்படமாட்டது.

பிரிவு 3. ...காப்பு ...ாருவருக்கும் வாழ்க்கை, விடுதலை, உட... இவைகளில் உரிமையுண்டு.

பிரிவு 4. எவரும் ...பணியிலேயோ அடிமைத்தனத்திலேயோ, அல்லது ஆட்டம் வணிகமும் ... ஆழ்த்தப்படார்: அடிமையும் அடிமைந்து துடைக்... எவ்வடிவில் தோன்றினும், தொடர்... கப்படும்.

பிரிவு 5 எவரும் துன்... ண்ணற்ற ... புறுத்தப் (சித்திரவதை) அல்லது கொடிய ...கோ ஆட்ப... இழிந்த ந...த்தைக்கோ அன்றி தண்டனை... டுத்தப்படார்.

பிரிவு 6. எங்கும் ... சட்டத்தின் ... முன்பு எவரும் தம்மைப் பிறர் தம்மை ...ர் ... மாந்தராக மதிக்குமாறு செய்ய உரிமை பெறுவ...

பிரிவு 7. சட்டத்தின் முன் ... னிலையில் யாவரும் சமமானவர்கள். அச்சட்டத்தின் ... ஒருதலை கோடிய தீங்கற்ற பாதுகாப்பை அவ... எல்லாரும் ஏற்றத்தாழ்வின்றிப் பெற உரிமை உடை...ர்களாவர். இந்த அறிக்கைக்கு மாறாக எவ்வகையிலேனும் ஒருபக்கச்சார்பான தீங்கிழைப்பு முறையில் மக்கள் நடத்தப்பட்டாலும் அத்தகைய வேறுபாட்டுமுறை எவ்வகையிலேனும் தூண்டப்படாலும் அதற்கெதிராக இதனால் தாக்கப்படும் அனைவரும் ஓரிணையான பாதுகாப்புப் பெற உரிமையுடையவராவர்.

பிரிவு 8. அரசியலமைப்பு அல்லது சட்டம் என்ற இவை வழங்கிய அடிப்படை உரிமைகளுக்கு முரணுகத் தோன்றும் செய்கைகளுக்குத் தகுதி மிகு நாட்டியல் நடுவர்குழுவால் (Tribunal) தீர்வு தேடிக் கொள்ள உரிமையுண்டு.

பிரிவு 9. நினைத்தபடி தளை (கைது) செய்தல், காரணங்காட்டாது சிறையிடல் அல்லது நாடு கடத்தல் என்ற இவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படார்.

பிரிவு 10. ஒருவரது உரிமையைப் பற்றியோ, கடமையைப் பற்றியோ அன்றி தண்டனைக் குற்றச்சாட்டைப்பற்றியோ முடிவு செய்யுமுன் விடுதலையான ஒருபாற் கோடாத நடுவர்குழு முன் நேர்மையான பொதுமன்றத் தீர்ப்பு வேண்ட எவருக்கும் சரிநிகர் உரிமையுண்டு

பிரிவு 11.—(1) தற்காப்பு எதிர்தருக்கத்திற்கு வசதியளிக்க உறுதி கூறும் சட்ட இயல்புக்குட்பட்டு நடக்கும் பொதுமன்ற உசாவலில் குறிப்பிட்டகுற்றம் மெய்பிக்கப்படும் வரை தண்டனைக் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் ஒரு குற்றமும் அற்றவர் என்றே கருதப்படுவர்.

(2) அப்பொழுதைய நாட்டியல் அல்லது அனைத்து நாட்டியல் நடைமுறைச் சட்டப்படி ஒருவருடைய செய்கையோ அன்றி செய்யாமையோ அது நிகழும் காலத்தில் தண்டனைக் குற்றமாகாதெனில் அதனைச் செய்தார் குற்றவாளியாகக் கருதப்படார். அன்றியும் அப்பொழுதைய சட்டநெறிப்படிப் பொருந்தும் தண்டனையைவிடக் கடுமையான தண்டனையும் வழங்கப்படார்.

பிரிவு 12. ஒருவனது உள்கமுக்கம், குடும்பம், இல்லம், கடிதப் போக்குவரத்து ஆகியவை பிறரது நினைத்தபடியான தலையீட்டுக்கு உட்படா. அன்றியும் ஒருவனது பெருமையும், புகழும் தாக்கப்படா. இத்தகைய தலையீடுகளிலிருந்து தம்மைச் சட்டம் மூலமாகக் காத்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இத்தகைய தலையீடுகள் அல்லது தாக்கல்களிலிருந்து தன்னைச் சட்ட மூலமாகக் காத்துக் கொள்ள ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு.

பிரிவு 13.—(1) நாட்டு எல்லைக்குள் விரும்பியவாறே எங்கும் போகவோ, குடியிருக்கவோ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் தன் நாட்டை, அல்லது எந்நாட்டையும் விட்டு அகலவோ அவற்றுக்குள் திரும்பவோ உரிமையுண்டு.

பிரிவு 14.—(1) அலைப்புப் பிடியிலிருந்து அகலவும் பிற நாட்டை ஏற்ற புகலிடமாகத் தேடிக் கொள்ளவும், அங்கிருந்து இன்பம் நுகரவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) உண்மையாகவே அனைத்து நாட்டியல் நோக்கத்திற்கும், கொள்கைக்கும் முரணுகத் தோன்றுவனவும் அரசியல் குற்றமாகாதனவுமான தொடர் வழக்குகள் பற்றி இவ்வுரிமைகள் வற்புறுத்த மாட்டா.

பிரிவு 15.—(1) நாட்டியலில் சேர்ந்திருக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) எவரும், தம் நாட்டியலில் தான் தோன்றித்தனமாக மறுக்கப்படார்; அன்றியும் அதனை மாற்றிக் கொள்ளவும் தடை செய்யப்படமாட்டார்.

பிரிவு 16.—(1) இனம், நாட்டியல், சமயம் என்ற இவற்றின் பிடிப்பிலிருந்து நீங்கி அகவை வந்த ஆண் பெண் எவரும் விரும்பியவாறே மணம் புரிந்து இல்வாழ உரிமையுண்டு. அவர்களுக்குத் திருமணச் செய்தியிலும் மண வாழ்க்கையின் போதும், மண விலக்குச் (மண முறிவு) செய்தியிலும் சம உரிமையுண்டு.

(2) மணக்க விரும்பும் இருபாலாரது விடுதலையான முழு இசைவும் பெற்ற பின்பே வாழ்க்கை ஒப்பந்தம் செய்யப் படும்.

(3) குடும்பம், குமுகாயத்தின் இயல்பாக அமைந்த அடிப்படைக்குழு ஆதலின், அதற்குக் குமுகாயம் அரசு என்ற இவற்றின் பாதுகாப்பைப் பெற முழு உரிமையுண்டு.

பிரிவு 17.—(1) ஒவ்வொருவருக்கும் தனியாகவோ, சேர்ந்தோ சொத்துடைமை கொள்ள உரிமையுண்டு.

(2) முறைகேடான நிலையில் எவருடைய பொருளும் கவர்ந்து கொள்ளப் படமாட்டாது.

பிரிவு 18 ஒவ்வொருவருக்கும் தம் கொள்கையையும் எண்ணத்தையும் சமயத்தையும் பின்பற்ற உரிமையுண்டு. இந்த உரிமை, சமயத்தை மாற்றிக் கொள்ளவும், தனியாகவோ அல்லது கூடியோ சமயக் கோட்பாட்டையோ நம்பிக்கையையோ வெளிப்படுத்துவதற்கும், பின்பற்றுவதற்கும், வணங்குவதற்கும், வழிபடுவதற்கும் உரிமையுண்டு.

பிரிவு 19. ஒவ்வொருவருக்கும் எண்ணுவதற்கும், எண்ணியதை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. இந்த உரிமை எத்தகைய தடையுமின்றி, ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய செய்திகளையும் கருத்துகளையும் எந்த நாட்டிலிருந்தும் எந்த முறையாலும் பெற்றுக்கொள்வதற்கும் கொடுப்பதற்கும் உரிமையுண்டு.

பிரிவு 20.—(1) ஒவ்வொருவருக்கும் அமைதியான முறையில் கூடுவதற்கும், கழகம் அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

(2) எந்தக் கழகத்திலும் சேரும்படி எவரையும் கட்டாயப் படுத்த உரிமையில்லை.

பிரிவு 21.—(1) ஒவ்வொருவரும் தங்களுடைய நாட்டாட்சியில் நேராகவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட நிகராளிகள் (Representatives) மூலமாகவோ, பங்கெடுத்துக் கொள்வதற்கு உரிமையுண்டு.

(3) உலகம் ஒப்புக்கொள்ளும் முறையில் மறைமுக ஒப்போலையளிப்புரிமையாலோ அல்லது அது போன்ற வேறு வழி ஒன்றாலோ காலத்திற்குக் காலம் நடத்தப்படும் தேர்தல்களின் மூலம் வெளியாகும் மக்களின் எண்ணத்தின்படி ஆட்சியின் அடிப்படை அமையும்.

பிரிவு 22. ஒவ்வொருவருக்கும் நாட்டியல் முயற்சியிலும் அந்தந்த நாட்டின் அமைப்புக்கும், பொருளியல் நிலைமைக்கும் தகுந்தபடி குமுகாயப் பாதுகாப்பு உறுதி அளிக்கப்படும். அதற்கேற்ப ஒருவருடைய வாழ்வும், பண்பும் உயர்வதற்கு வேண்டிய பொருளியல் குமுகாய, கலை, பண்பு உரிமைகள் காப்பாற்றப்படும்.

பிரிவு 23.—(1) ஒவ்வொருவருக்கும் தமக்கு விருப்பமான வேலையில் அமர்வதற்கும், நலந்தரும் நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்வதற்தும், வேலையில்லாத் திண்டாட்டத்தினின்று தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் உரிமையுண்டு

(2) ஒவ்வொருவருக்கும் எத்தகைய வேறுபாடுமின்றி தம தம் வேலைக்கேற்ப ஊதியம் பெற உரிமையுண்டு.

(3) வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் தேவையான போது குமுகாயப் பாதுகாப்பு அளிப்பதுடன் மக்கள் வாழ்க்கையின் மதிப்பிலே ஒவ்வொருவரும் அவரவர் குடும்பங்களும் வாழ்வதற்கேற்ற ஊதியம் பெறும் உரிமையுண்டு.

(4) ஒவ்வொருவருக்கும் தம் தம் நலனைக் காப்பாற்றிக் கொள்ள வணிகக் கூட்டுறவுச் சங்கங்களில் சேருவதற்கும் அவற்றை அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

பிரிவு 24. ஒவ்வொருவருக்கும் வேலை நேரத்தில் வரையறையும், ஓய்வும், விடுபாடும் காலத்திற்குக் காலம் ஊதியத்தோடு பெறும் விடுமுறையும் அடைவதற்கு உரிமையுண்டு.

பிரிவு 25.—(1) உணவு, உடை, வீடு, மருத்துவப் பேணுகை என்பவற்றுடன் தேவையான குமுகாயத்

தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி — 1 இதழ் எண் 24 பகுதி—39-42

இதழின் சிறப்பாசிரியர் ஐயா பாவலரேறு அவர்கள்
வெளிநாடு சென்றுள்ளமையால், ஆசிரியவுரை
அடுத்த இதழில் இடம் பெறும்.

—முதல் பக்கத் தொடர்ச்சி

யான ஒரு வலிவியக்கத்தை வேறு யாராவது உருவாக்க மாட்டார்களா, என்று மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்; சரியான கட்டமைப்புள்ள ஓர் இயக்க அமைப்புக்கு அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கையில்தான், தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் தோற்றுவிக்கப் பெற்றது!

அரசியல் விடுதலை, பொருளியல் ஆகிய அனைத்து அடிப்படை நிலைகளுக்குமான முழுமையான தெளிவுக் கொள்கைகளும் எங்கள் கழகக் கட்டமைப்புள் மூலநிலைகளாக இருந்தமையால், மக்களின் பெருத்த துணை எங்களுக்கு வாய்த்துள்ளது.

தமிழீழ மக்களின் பாரிய ஆதரவு எங்களுக்குக் கிட்டுவதற்கு எங்கள் கழக மறவர்களின் இடையறாத உழைப்பும் உறுதியும் மூலமானவைகளாகும்!

[5] **கேள்வி** : கடந்த 26-7-83 அன்று, வெளிக்கடைச் சிறையில், சிங்களவரால் அடித்துப் படுகொலை செய்யப் பெற்ற 54 ஈழத் தமிழர்களில், உங்கள் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எவரேனும் மாய்க்கப் பெற்றுர்களா?

முகுந்தன் : தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த அரிய வீரக் கண்மணிகள் 18 பேர்களை அந்நிகழ்ச்சியில் கொலை செய்துள்ளார்கள். பெரும்பகுதி உயிரிழப்பு எங்கள் கழகத் தவருக்குத்தாம். எங்கள் 18 உறுப்பினர்களைத் தவிர்த்து கொலையுண்ட பிறரில், பலர் எங்கள் கழகத்துக்கு உள்முக ஆதரவாளர்களாக இருந்ததோடு, சிறையினின்று விடுதலைப் பெற்று மீண்ட பின், எங்கள் கழகத்திலேயே உறுப்பினர்களாகச் சேர்ந்து தொண்டாற்றுவதற்கும் அணியமாக [தயாராக] இருந்தார்கள்.

[6] **கேள்வி** : வெளிக்கடைச் சிறையில் நடந்த அப்படுகொலையில், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர்களோ அல்லது முகமையானவர்களோ எவராவது மாய்க்கப் பட்டனரா?

முகுந்தன் : அவர்களில் ஒருவர்கூட இல்லை. 1977-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சார்ந்த எந்தத் தலைவரும் அல்லது முகமையானவர்களும் எவரும் தளைப்படுத்தப்பட்டதுகூடக் கிடையாது! எங்கும் கொலை செய்யப்படவுமில்லை!

வெளிக்கடைச் சிறையில் அடித்துக் கொள்ளப்பெற்ற அனைவரும் அரசுக்கு எதிராகப் போராடியவர்களே! இன்னும் சொன்னுல் அவர்களில் பெரும்பாலோர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையையும் அதன் கொள்கை நெகிழ்ந்த போக்கையும் கண்டித்தவர்களே!

[7] **கேள்வி** : மருத்துவர் திரு. இராசசுந்தரம் என்பவருடைய இழப்பைக் குறித்து உங்கள் கருத்து என்ன?

முகுந்தன் : மருத்துவர். திரு. இராசசுந்தரம் அவர்கள் ஒரு தூய பொதுத் தொண்டர். மிகச் சிறந்த பண்பாளர். அகதிகளாகச் சிங்களவரால் அடித்துத் துரத்தப்பட்ட ஏழை எளிய பாட்டாளி மக்களின் வாழ்க்கையை மலர்த்தி அவர்களை உயர்த்துவதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு அல்லும் பகலும் அயராது உழைத்தவர். இதுவரை இலங்கையில் எந்த அரசியல் கட்சிகளும், வேறு பிற இயக்கங்களும் எண்ணிப் பார்க்கவும் இயலாத வகையில்; — அகதிகளாக அலறி ஓடிவந்த ஏழைஎளியோர்க்குப் பாதுகாப்பையும் வாழ்க்கையையும் தந்து காத்து நின்ற பெருந் தகையாளர் அவர். 100 முதல் 150 வரையிலான தமிழ்ப் பாட்டாளிக் குடும்பங்கள் கொண்டதாக ஒவ்வொரு சிற்றூரையும் அமைத்து, அவர்களுக்கு வாழ்க்கையைத் தந்தவர். இப்படிப்பட்ட சிற்றூர்களாகிய குடியேற்றப்பகுதிகள் ஐம்பத்தியாறினை (56) இதுவரை அமைத்துத் தொண்டாற்றி வந்தார். அவர்கள் அனைவர்க்கும் வீடும் நிலமும் தந்தது மட்டுமல்லாமல், கல்வியும் வேலை வாய்ப்பையும் உடன் அமைத்துத் தந்தார்.

மலையகத் தமிழர்கள் தமக்குச் சொந்தமாக நிலத்தைப் பெற்றது என்பதே இவருடைய திட்டத்தின் கீழ் தான்! மலையகத் தமிழர்க்குக் கல்வி வாய்ப்பை இலங்கை அரசு அளிக்கத் தவறியது! இவரோ அவ்வாய்ப்புக்கு நல்ல வழிகளை அமைத்துத் தந்தார். "காந்திய இயக்கம்" என்ற அமைப்பின், செயலாளராக நெடிய தொண்டாற்றினார்.

இவரும், இவரை ...வ்விட... சார்ந்த பிற தொண்டர்களும், எக்காலத்திலும் ... சயன் ...திலும் எந்நிலையிலும் எவ்வகையான அச்சுறுத்தச் ... மைகளிலும் (பயங்கரவாதம்) ஈடுபட்டதே கிடையாது.

(8) **கேள்வி** : எத்துணை (எத்தனை) ஆண்டுகளாக நீங்கள் பொதுத் தொண்டில் ஈடுபட்டு வருகிறீர்கள்?

முகுந்தன் : 1961-ஆம் ஆண்டிலிருந்தே எனக்கு பொதுத்தொண்டு உணர்வு என் நெஞ்சில் ஆழ நிரம்பியிருந்தது. அந்த ஆண்டிலிருந்து தமிழினச் சார்பாக நடந்த, அப்போது தந்தை செல்வா அவர்களின் தலைமையிலிருந்த தமிழரசுக் கட்சி நடத்திய பல போராட்டங்களிலும் பொதுத் தொண்டுணர்வுடன் பங்கு கொண்டு இருக்கிறேன். 1972-இலிருந்து இளைஞர் பேரவையின் பொருளாளராகப் பணியாற்றியிருக்கிறேன். 1974-இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையின் செயலாளராகப் பணியாற்றியுள்ளேன். 1977-ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து மூன்றாண்டுக்கால அளவிற்கு, தமிழீழ விடுதலைப்புலிகள இயக்கத்தின் தலைவனாக இருந்து, அதற்குக் கட்டமைப்பான வடிவத்தைச் சமைத்துக் கொடுத்திருக்கிறேன். ஆனாலும், கடந்து வந்த 8 ஆண்டுகளில், தமிழீழத் தேசிய இன விடுதலைக்குரிய பொதுத் தொண்டுப் பணிகளுக்கு என்னையே முழுக்க முற்ற ஒப்படைத்து உழைத்து வருகின்றேன். எனக்கு இறப்பு நேரும் வரைக்கும் எம் இன மக்களின் நல்வாழ்வுக்கும் அவர்களின் முழு விடுதலைக்குமாக அயராது நேர்மையோடு பணியாற்றிக் கொண்டேயிருப்பேன்!

(9) **கேள்வி** . இலங்கையின் இனவெறி அரசு, உங்கள் தலைக்கு விலை குறிப்பிட்டு விளம்பரம் செய்துள்ளதாமே, உண்மையா?

முகுந்தன் : ஆம்! இலங்கையில் மிகக் கூடுதலாக தலைக்கு விலை வைத்ததில், நான் முதல் ஆளாக இருந்தேன்! அப்போது ஒரு தலைக்கு ஓரிலக்கம் உருவா (1 00,000) என்று நான்கு பேர்கள் குறிப்பிட்டு அரசு பெரிய விளம்பரங்கள் செய்தது (நான்கு பேர்களின் பெயர்கள் : 1. உமா மகேசுவரன் நான்) 2. வாமதேவன். 3. நாகராசா 4. கண்ணடி என்ற பத்பநாதன் ஆகியோர்.

1981-இன் பிற்பகுதியில், என் தலைக்கான விலையாக இலங்கை அரசு மேலும் ஒன்பது இலக்கம் உருவாவைக் (9,00,000) கூட்டி, பத்திலக்கம் (10,00,000) என அறிவித்தது.

(10) **கேள்வி** : உங்கள் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மறவர்களைப் பற்றி ஏதேனும் கருத்து கூறுகிறீர்களா?

முகுந்தன் : எனக்கு இருக்கின்ற தொண்டுணர்வுக்கும் மக்கள் நல விருப்பத்திற்கும் நிகரான உணர்வுள்ள அரிய மறவர்களாகவே எம் அனைத்துத் தோழர்களும் இருக்கிறார்கள்! எனக்கு வழிகாட்டுவதற்குரிய அறிஞர்களும், தோழர்களாகவே என் பக்கத்திலேயே இருக்கிறார்கள்! நான் ஒருவேளை இல்லாது போய்விட்டாலும் கூட, எமக்குரிய கொள்கையைச் செயற்படுத்தி வெற்றி பெற்றே தீர்வதற்குரிய அரிய ஆற்றல் செறிவுடைய மறவர் கூட்டமே எம் கழகம் முழுக்கவும் நிரம்பியுள்ளது. அத்தகைய வலிவுக் கூட்ட அமைப்புக் குடும்பமாக நாங்கள் வினையாற்றுவதால் நாங்கள் எங்கள் நாட்டை வென்றெடுக்கப்போவது உறுதி!

நன்றி ! வணக்கம்

விடு விடுத்து நேருரை கேட்டவர் : அருளி.

ஐரோப்பியச் சுற்றுச்செலவு மேற்கொண்டுள்ள
கழக முதல்வர் ஐயா பாவலரேறு அவர்களை
வாழ்த்தி வழியனுப்பிய மகிழ் நிகழ்ச்சி!



தமிழ்நிலம், தென்மொழி ...கிய கிழமை பல்வேறு தமிழ் இயக்கங்களின் தமிழ்ச்சிட்டு ஆ... ஆசிரியரும், அழைப்புக்கு இணங்கி, சென்ற மாத இதழ்களின் ...யின் முதல்வர், 10-9-83 காரிக்கிழமை (சனி) உ. த. மு. க. ...ரேறு பெரு அன்று, காலை 6-00 மணி மாகிய பாவல... வர்கள், ...ருஞ் அளவில் இந்திய வான்வழி சித்திரனார் அ... ங்கி வழிமேலை (Indian Air Lines) (எண் : நாடுகளில் இய... கின்ற 440) என்னும் வனூர்தி வழி, செலவு (பயணம்) மேற் கொண்டுள்ளார்.

சுற்றுச் செலவு மேற் கொண்ட நாளுக்கு முன்னாள் காலைப் பொழுதிலிருந்தே அவரின் அயலகச் செலவு பெரும் பயனுடையதாகவும் நிறைவுடையதாகவும் அமைய வேண்டும் என்று வாழ்த்துவதற்கும், வழியனுப்புவதற்கும், தமிழகத்தின் பலபகுதிகளிலிருந்தும் உ. த. மு. க. வின் முகமையான பொறுப்பாளர்களும், தென்மொழியன்பர்களும், தமிழின நலன் நாடும் பிற இயக்கங்களைச் சார்ந்த அன்பர்களும் பெரியவர்களும் தென்மொழியில்லத்திற்கு வந்து போகவும், தங்கவும் ஆக இருந்தனர். பாவலரேறு அவர்களிடம் அன்பும் மதிப்பும் கொண்ட பேராசிரியர் சிலரும் வந்து வாழ்த்தி மகிழ்ந்தனர்.

"விடுதலை" நாளிதழின் துணையாசிரியர் பாவலர். கவி. பூங்குன்றன், பேராசிரியர் - இறையன், திரு. ந. முத்துக்குமரன், திரு. மா. ஆறுமுகம், திரு. மா. செ. தமிழ்மணி, திரு. மாரி அறவாழி, திரு. இளஞ்சேரல் முதுபாண்டியன், திரு. இளங்கோ, குழந்தை - ஈசுவரசன பா. திரு. ஆறிறைவன், திரு. மா. பூங்குன்றன், திரு. ப அருளி, திரு. துரை, திரு. வேலவன், திரு. ஞாலன், திரு. ப. முருகவேள், திரு. சௌந்திரபாண்டியன், திரு. ஏ. எசு. மணவைத்தம்பி. திரு. பா.அறவாணனார், திரு.வாட்டி. பா.தாயம்மாள் அறவாணனார், திரு. துரை தென்னவன். திரு.சிவபெருமான் ஆகியோர் நிறைந்த வுள்ளத்தினராய், பாவலரேறு அவர்களை வழியனுப்புவதற்குக் குழுமி, ஐயா அவர்களுக்கு அன்பளிப்புகள் செய்தனர்.

காலை 6-00 மணியளவில், கழகமுதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் அனைவரின் அன்பு வாழ்த்துதல்களும் சூழக் கமழ, உளம் நிறைந்த வணக்கத்தையும் அன்பையும் தெரிவித்து விட்டு, அனைவோரிடத்திலும் தனித்தனியே விடை பெற்று, வானூர்தியேறினார்.

பல கழகங்கள் ஆங்காங்கு நடத்தும் விழாக்களிலும் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் ஆய்வரங்குகளிலும் தொடர்ந்து கலந்து கொண்டு சிறப்பித்துப் பயன்பாடு வருவதாகச் செய்திகள் அங்கிருந்து வந்து கொண்டிருக்கின்றன.

— உறுப்பாசிரியர் குழு.

1. இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து திருவொற்றியூர் நகரக் கிளையின் பொதுக்கூட்டம்.

சிங்கள இனவெறியர்களால் தமிழர்கள் மீது நடத்தப்பெற்ற கொலை வெறித்தாக்குதல்களாலும் தீவைப்பு கொள்ளை கற்பழிப்பு போலும் விலங்காண்டிச் செயல்களாலும் இலங்கை எரிந்துகொண்டிப்பது அனைவரும் அறிந்ததே! அதுபற்றிய கண்டனக் கூட்டத்தை திருவொற்றியூர் உ.த.மு.க. நகரக்கிளையின் செயலாண்மையர்கள் 7-9-83 அன்று மாலை 7-மணி அளவில் அங்குள்ள சன்னதி தெருவில் மிகச் சிறப்பாக நிகழ்த்தினர். கூட்டத்தை ஆர்வமாக முன்னின்று நடத்திய தமிழ்த்திரு. தங்கராசு அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தாரை வரவேற்ருர்.

திருவாட்டி தேன்மொழியருளி அவர்களால் தமிழ்த்தாய் வாழ்த்து பாடபெற்றது. கூட்டத்திற்கு நெடுநாள் தென்மொழி அன்பரும், வடசென்னை மாவட்ட உ.த.மு.க. பொருளாளரும் ஆகிய திரு. துரை தென்னவன் தலைமையேற்றுப் பேசியபின், எண்ணூர் 'இலக்கியச் சோலையைச் சார்ந்த திரு தென்முகநம்பி அரியதொரு பாப்பொழிவை நிகழ்த்தினர். அவர்க்குப்பின் திரு. துரையரசன் (தி. மு. க.) இலங்கைச் சிக்கல் தொடர்பாக தி.மு.கழக நிலையில் நின்று பேசினர். பின்னர் மா. பொழிலன் இலங்கைச் சிக்கல் தொடர்பாக நாம் செய்யவேண்டுவது குறித்துப் பேசினர்.

அடுத்து புதுவை மாநில உ.த.மு.க. அமைப்பாளரும், சொல்லாய்வறிஞரும் ஆகிய திரு. ப. அருளி அவர்கள் நீண்ட நெடிய, அரிய புள்ளிவிளக்கங்கள் பலவற்றைச் சுட்டி, இலங்கை அழிவு நிலைகளையும், அதற்கு இளைஞர்கள் (ஈழ விடுதலைப் போராளிகள்) மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்தும் ஆழமாகச் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாக உ.த.மு. கழக முதல்வரும், தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு இதழாசிரியரும் ஆகிய பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் இற்றைத் தமிழனின் இழிநிலை பற்றியும், ஈழத் தமிழர்களின் அழிவுநிலை குறித்தும் நீண்ட விளக்கத்துடன் கருத்துரையாற்றினர்கள். கூட்ட முடிவின் பொருட்டு பெருமழையின் காரணமாக கூட்டம் 11.30 மணியளவில் திரு. பெ. செல்வராசு தி.க. செயலாளரின் நன்றியுரையுடன் நிறைவுற்றது.

2. கொள்கை விளக்கக்கூட்டம்-ஈரோடை.

ஈரோடை நகர உ.த.மு.க பொறுப்பாளர்கள் தேர்வு, மடங்கல் 26/2014 (11-9-83) ஞாயிறு அன்று மாலை பெரியார் மன்றத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு பெரியார் மாவட்டச் செயலாளர் திரு. பாவேந்தர் இராமலிங்கம் அவர்கள் முன்னிலைவகித்தார். உ.த.மு.க. உறைத்த தொண்டர் திரு. க. தமிழப்பன் உ. த. மு. கவின் ஏழு கொள்கைகளையும் விளக்கிவந்திருந்த புதிய தோழர்களுக்கும் புரியமாறு நீண்ட சொற்பொழிவாற்றினர். அதன் பின் உறுப்பினர்கள் சிலர் ஈரோடை நகரக்கிளையின் பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். நகரப்பொறுப்பாளர்கள் தேர்விற்குப்பின் ஈரோடை திரு. வ. காளிமுத்து அவர்கள் நன்றியுரையாற்றினர்.

3. நெமிலியில் ஈழத் தமிழர் இன்னல் விளக்கப் பொதுக்கூட்டம்.

ஈழத் தமிழர் சிக்கலில் இடைவிடாது குரலெழுப்பிக்கொண்டிருக்கும் உ.த.மு.க. உறுப்பினர்கள் ஆங்காங்கே மக்களிடை உண்மை நிலைகளை உணர்த்துவது குறிப்பிடத்தக்கது.

அந்நிலையில் வடஆர்க்காடு (வடபகுதி) கிளை அமைப்பாளர் திரு. மா. செ தமிழ்மணி அவர்களின் குன்றாத உணர்வினல் ஈழத் தமிழர் இன்னல் விளக்கப் பொதுக்கூட்டம் கடந்த 18-9-83 மாலை 6 மணி அளவில் நெமிலியில் கூட்டப்பெற்றது.

கழக மறவர்கள் புலவர் குமரதன்ஞெளியன், திரு. கோ. நக்கீரன், திரு. வ. திருவேங்கடம், திரு. புஞ்சை கோதண்டம் ஆகியோர் ஈழத்தமிழர் சிக்கல் தொடர்பாகவும், மேற்கொண்டு நம்பணிகள் குறித்தும் பேசலாயினர்.

இறுதியில், உ.த.மு க. புதுவை மாநில அமைப்பாளரும், சொல்லாய்வறிஞருமாகிய திரு ப. அருளி, அவர்கள் ஈழம் தமிழர்க்கே உரியது என்பதை வாலாற்றுப்படி நிறுவியும், இக்கால ஈழநிலைகளைப் புள்ளி விளக்கத்தொடு விளக்கியும், மேற்கொண்டு நாம் செய்ய வேண்டுவன குறித்தும். நீண்டதொரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்கள் பாவலரேறு அவர்களின் பாடல்வரிகளை உணர்ச்சி பொங்க மேடை மீது முழக்கியபோது, அவர் புலியெனக் காட்சியளித்தார் என மக்களுள் சிலர் கூறினர். இறுதியில் தலைவர் மா.செ.தமிழ்மணி அவர்கள் கழகமுதல்வர் ஐயா பாவலரேறுவின் 'சிங்கள இனமே' எனும் பாடலைப்பாடி வீறுபடுத்தி விடை கொடுத்தார்.

அண்ணனும் தம்பியும்

"அண்ணு!"

"என்ன தம்பி?"

"சென்னையில் நடைபெற்ற மாநில பாசனத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தமிழக முதல்வர் பேசியிருக்கும் பேச்சைப் படித்தீர்களா, அண்ணு?"

"படித்தேன். பீகாருக்கும் வங்காளத்துக்கும் இடையே ஏற்பட்ட சிக்கலுக்கு விரைவான ஒரு தீர்வு காணப்படுகிறது. அதுபோல, பஞ்சாப், அரியாணு, இராசத்தான் போன்ற மாநிலங்களுக்கிடையே உள்ள சிக்கல்களுக்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வங்க நாட்டில் உள்ள பராக்கா அணைச்சிக்கல் குறித்தும்கூட அந்த நாட்டுடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனல் தென் மாநிலங்கள் தொடர்பான காவிரி ஆற்று நீர்ச்சிக்கல் விரைவில் தீர்வுகாணப்படாமல் நீண்டு கொண்டே போகிறதே!" என்று பேசியிருக்கிருர்.

"நடுவண் அரசு தென் மாநிலங்களில் ஏற்படும் சிக்கலுக்கு விரைவில் தீர்வு காண முன் வராமல் இருப்பது ஏன் அண்ணு?"

"நீயே சொல் தம்பி!"

"வடமாநிலங்களில் உள்ள மக்கள் வல்லமையுடையவர்கள். தங்கள் மாநிலத்தில் ஒருசிக்கல் என்ருல் ஒருமுகமாகத் திரண்டு எழுந்து நிற்கக் கூடியவர்கள். ஆனல் தமிழர்களோ ஏமாளிகள்; எந்தச்சிக்கலிலும் ஒன்று திரண்டு ஒருமுகமாகக் குரல் கொடுக்கத் தெரியாதவர்கள் என்பதனல் தானே?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

தொண்டுகளையும் தானும் தன் குடும்பமும் நலமாக நல்வாழ்வு வாழ்வதற்குப் போதிய வாழ்க்கைத் தரத்தைப் பெறுதற்கும் வேலையின்மை, நலக்கேடு உறுப்புக்குறை, கைம் பெண்ணுதல், முதுமை அல்லது தன் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட காரணங்களினல் ஊதியமின்மை ஏற்படும் காலத்தில் பாதுகாப்புப் பெறுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.
(2) தூளுற்ற பெண்டிரும் குழவிகளும் சிறப்புப் பாதுகாப்புக்கும் உதவிக்கும் உரிமை உடையவராவர். முறைப்படி மணமானவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளாயினும் அவர்கள் ஏற்றத் தாழ்வின்றி ஒரே வகையான குமுகாயப் பாதுகாப்பினைத் துய்க்க உரிமை உடையவர்களாவர்.

பிரிவு 26.—(1) ஒவ்வொருவருக்கும் படிப்பதற்கு உரிமையுண்டு. முதல் நிலைக் கல்வியும், அடிப்படைக் கல்வியும் இலவசமாக அளிக்கப்படும். அடிப்படைக் கல்வி கட்டாயமாக வற்புறுத்தப்படும். பொதுவாக, தொழிற் கல்வியிலும் நுட்பக் கல்வியிலும் எல்லோருக்கும் சமமாக வாய்ப்பளிக்கப்படும். உயர் நிலைக் கல்வி தகுதியின் அடிப்படையிலே வழங்கப்படும்.
(2) அடிப்படை உரிமைகளையும், மாந்தருடைய உரிமைகளின் மதிப்பையும் பெருக்கவும், மாந்தருடைய பண்பாட்டை நிறைக்கவும் ஆன முறையில் கல்வியின் போக்கு அமையும். அது ஒற்றுமையையும், நாட்டையும் நாடுகளுக்குள்ளும் இனத்திற்குள்ளும், கூட்டத்திற்குள்ளும் வளர்த்து அமைதியை நிலை நாட்டும். ஒன்றிய நாட்டின் முயற்சியையும் ஓங்கச் செய்யும்.
(3) பெற்றோருக்குப் பிள்ளைகளின் கல்வி வகையைப் பற்றி முன்கூட்டியே முடிவு செய்ய முழு உரிமையும் உண்டு.

பிரிவு 27 —(1) ஒவ்வொருவருக்கும் குமுகாயத்தின் கலை வாழ்விலே கலந்து கொள்வதற்கும், கலையிலே ஈடுபடுவதற்கும், அறிவியல் துறை முன்னேற்றத்தில் பங்கு கொள்வதற்கும் அதன் பயனைப் பெறுவதற்கும் உரிமையுண்டு.
(2) ஒவ்வொருவருக்கும் தங்களால் வெளியிடப்பட்ட அரசியல், அறிவியல் இலக்கிய உண்மைகளினல் வரும் பெயரையும், பொருளையும் பாதுகாத்துக் கொள்ள உரிமையுண்டு.

பிரிவு 28. இந்த அறிக்கையில் கண்ட படி நாட்டிற்கும், உலகத்திற்கும் பொதுவான அமைப்புக்களால் உரிமைகளை அடைவதற்கு, ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

பிரிவு 29.—(1) ஒவ்வொருவருடைய மனப்பண்பும் கட்டுப்பாடின்றி முழு நிறைவாக வளர்ச்சியாக்கம் அடைதற்குரிய ஒரே ஒரு கருவி, அவரவரது குமுகமே ஆதலின் அவ்வக் குமுகத்துக்கு அவரவர் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு.
(2) ஒவ்வொருவருக்கும் தன் தன் உரிமைகளையும் விடுதலைகளையும் பயன்படுத்தும்போது அவர்களது கருமங்களைக் கட்டுப் படுத்துவனவாய செயல்கள், மற்றவர்களது உரிமைகளுக்கும் விடுதலைகளுக்கும் அளிக்க வேண்டிய கணிப்பினையும் மதிப்பினையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் மட்டும் சட்ட வகையாக உறுதிசெய்யப்பட்டனவாயும். ஒரு மக்கள் நாயகக் குமுகாயத்தின் ஒழுக்கம், பொதுமக்கள் அமைதி, பொது நல வளர்ச்சியாக்கம் என்பவற்றுக்கு அற நயன்மைப்படி வேண்டிய அளவினவாயும் இருக்கும்.
(3) ஒன்றிய நாடுகள் நிறுவனத்து நோக்கங்கள் கொள்கைகளுக்கு முரணுக இவ் வுரிமைகளையும் விடுதலைகளையும் எச்செயதியிலேனும் பயன்படுத்தவொண்ணது.

பிரிவு 30. இவ்வறிக்கையில் கண்ட உரிமைகளையோ, விடுதலைப் பேறுகளையோ அழிக்க வேண்டி எதனையேனும் செய்யவோ, அத்தகைய இபக்கத்தில் ஈடுபடவோ, எந்த நாட்டுக்கும், எந்தக் குழுவினுக்கும், எந்த மாந்தனுக்கும் உரிமையளிக்கும் குறிப்புடையதாக இந்த அறிக்கையில் உள்ள எதற்கும் பொருள் செய்தலாகாது.

உ.த.மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்: பெறுநர். தூல்-அஞ்சல்
திரு.
தமிழ்நிலம்
5. அருணுசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணுசலத் தெரு, சென்னை-5.

குலை எரிகின்றது! அடடா!...

ப அருணி.

எரிக்கட்டும்! எரிக்கட்டும்!
எந்தமிழ்ப் பெண்டிர்
உயிர்க்கற்பைக் குதறட்டும்
சிங்களத்திக் குண்டர்!
நெரிக்கட்டும் எந்தமிழத்
தந்தைதாய் மாரின்
நெடுங்கழுத்தை நெளிந்துமெரி
நெருப்பினிலே வாரி
எறியட்டும் எம்மவரை!
இறுத்துத்தன் எட்டும்,
எந்தமிழர் வயிறுகளை
குடல்குலைகள் காயும்!
உரிக்கட்டும் எம்மவர்கள்
உடுத்தவுடை காயும்!
உதைக்கட்டும்! கோழையென
அவர்கள்கதைக் கட்டும்!

முறிக்கட்டும் எந்தமிழர்
முதுகை,இடுப் பெலும்பை!
முறுக்கட்டும் எந்தமிழர்
கால்கையை நைய!
பறிக்கட்டும் தலைகளையே!
பார்த்துமகிழ் மூட்டும்!
பரிவற்ற நெஞ்சினராய்ப்
பசுங்குழந்தைத் தலையை
வெறிப்புற்றோர் மிதிக்கட்டும்!
வெட்டிப்போ டட்டும்!
வெறியேறி விருப்பூறிக்
குருதிபருகட்டும்!
அடிப்புண்ட உளத்தினராய்ச்
குனுற்ற எம்மோர்
அரும்பெண்டிர் வயிறகிந்து
கருவையழிக் கட்டும்!

அறுக்கட்டும் எந்தாயர்
தாலிகளை! அன்றோர்
அருமையுளம் புண்படுமா
றருவருப்புப் பேச்சைத்
துறுக்கட்டும் காதுகளில்!
துடிதுடிக்க எம்மோர்
செருப்படிகள் வாங்கட்டும்!
காறித்துப் புறட்டும்!
பொறுக்கட்டும் எந்தமிழர்
உடமைப்பொருள் யாவும்!
நொறுக்கட்டும் எந்தமிழர்
கடைவணிகம் எல்லாம்!
புறப்பட்டு எந்தமிழர்
புறமோடி பஞ்சிப்
புரியாது இக்கெல்லாம்
கதியற்றோ டட்டும்!

கருக்கட்டும் நெய்யூற்றி
தமிழவரின் உடம்பை!
கரியாக்கிப் போடட்டும்
எந்தமிழர் குடம்பை!
இறுக்கட்டும் கயிறுகளால்
தமிழவரின் கழுத்தை!
எதிரீட்டி ஏவட்டும்
எந்தமிழர் உடல்மேல்!
வெருட்டட்டும் தமிழர்களை
மூலைக்கு மூலை!
வெறியாட்டம் போடட்டும்
ஈழத்தில்! இன்னும்
சிறைக்கோட்ட அறைகளையே
திறந்துமிக் களவர்
சிதைக்கட்டும் எந்தமிழச்
செம்புலிகள் உயிரை!

எரித்தோரை எம்மவரை
எரிநீரில் இட்டே
சிரித்தோரை, எந்தமிழப்
பெண்கள்சிதைத் தோரை,
நெரித்தோரை முறித்தோரை
நெடுகதமிழ் மக்கள்
நெடுங்கொலைவாய்ப் பட்டொழியக்
கொடுவினைசெய் தோரை
நெறிகூறும் திருப்புகழார்
மாணிழையார் தாலி
பறித்தோரைக் குறித்திந்தான்
பழமரபு மானம்
செறிவுறைநன் மறத்தமிழர்
உணர்கின்றார்! உள்ளம்
செந்தழலாய்ப் பெரும்புயலாய்ச்
சீறித்துடிக் கின்றார்!

அடடாஓ! அடடாஓ!
அடடாஓ! அடடா!
குடரெல்லாம் நடுநடுங்கக்
குலையெரிகின் றதடா!
கும்பியெலாம் குருதியெலாம்
குமைந்தெரிகின் றதடா!
உடம்பெல்லாம் உயிரெல்லாம்
உணர்வுநிலை யெல்லாம்
ஒருசேர நெருப்பாகி
உலையாகி நின்று
அடடாஓ! துடிக்கிறது!
அனல்மூச்சே மூக்கில்
அழன்றுவெளி பாய்கிறது!
அகமெங்கும் தீ தீ!
நடடா!படை எடடா!இனி
நடவாதினி அமைதி!

அடடாபகை! அறடாபகை!
அமையாதினி அமைதி!
கொடடாஉலை! நடடாமுலை!
விடடாஇனி அமைதி!
கெடலாடிய கொடியோர்குலம்
அடியோடறுத் திடவே
எடடாகலன்! எறிடாபுறம்!
முறிடாஅதை முற்ற!
உடன்றோர்தமை உடனேமுடித்
தடிசாய்த்தவர் மரபில்
கடமாவலிப் புலிநீயென
வந்தோய்!உனக் கின்றே
கடமையினி ஒன்றே,எழு!
வென்றே,அவர் கொன்றே!

திரு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்... —

அமிர்: இப்பொழுது இருக்கும் முயற்சிகள் போதுமானவையல்ல. ஆனால் நாங்கள் தொடர்ந்து எடுக்கத்திட்டமிட்டிருக்கும் முயற்சிகள் உறுதியாகத் தமிழீழத்தைப் பெற்றுத்தரும் என்று நான் நம்புகிறேன்.

[7] ஆசிரியர்: தமிழ் ஈழம் கிடைப்பதற்கு வன்முறை அல்லது காந்தியமுறை இந்த இரண்டு முறையில் எந்த முறையை நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று விரும்புகின்றீர்கள்?

அமிர்: இன்று தமிழர் இந் நாட்டில் இருக்கும் நிலையில் நாங்கள் காந்திய வழியில்தான் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த வழியில் தான் எம் முயற்சிகளை மேற்கொள்ள எண்ணியிருக்கின்றோம். நாட்டில் சூழ்நிலை மாற்றம், அனைத்துலக [சர்வதேச]ச் சூழ் நிலையில் இருக்கும் மாற்றம் ஒருவேளை வேறு வழிகளுக்கு இயக்கத்தைத் தள்ளலாம். ஆனால் இன்று இருக்கும் நிலையில் நாங்கள் மென் முறையில் [சாத்வீகம்] காந்திய வழியில்தான் செல்லத்திட்டமிட்டுச் செயற்படுகின்றோம்.

[8] ஆசிரியர்: அதாவது அரத்தம் சிந்தித்தான் ஒரு நாடு விடுதலை பெறமுடியும் என்ற ஒரு நிலை உலகவரலாற்றில் இருக்கின்றது. அப்படி இருக்கும் பொழுதும் நீங்கள் காந்திய வழியிலே அந்த விடுதலையைப் பெற்றுவிடமுடியும் என்று நினைப்பது காந்தி பிறந்த நாட்டிலேயே நடைபெறாத அந்நிலை உங்கள் நாட்டில் நடத்தமுடியும் என்று எப்படி நீங்கள் நினைக்கின்றீர்கள். இந்தியா தன்னுரிமை பெறுவதற்குக் காந்தீய முறைமட்டும் பயன் தரவில்லை. அங்கு இருக்கின்ற மக்கள் கிளர்ந்தெழுந்து போராடி அரத்தம் சிந்திய பின்னர்தான் விடுதலையைப் பெறமுடிந்தது. அப்படி இருக்கும் பொழுது இங்குமட்டும் அந்தமுறை உண்மையாகவே பயன்பெறும் என்று நீங்கள் நம்புவது, இதை ஒரு கற்பனையான கொள்கையாகவே செய்துவிட முடியாதா?

அமிர்: இலங்கை ஒரு துளி அரத்தமும் சிந்தாது தன்னுரிமை (சுதந்திரம்] பெற்ற நாடு, இந்தியத் தன்னுரிமை [சுதந்திர]ப் போரினுடைய ஒரு விளைவாக, துணை இலங்கையில் உரிமை [சுதந்திரம்] கிடைத்தது. மலேசியாவிலிருந்து சிங்கப்பூர், பேச்சு முறை மூலமே உரிமையை [சுதந்திரத்தை]ப் பெற்றது. உலகில் அரத்தம் சிந்தாமலே உரிமை [சுதந்திரம்] பெற்ற நாடுகள் பல உண்டு. அண்மையில் பிரித்தானிய முற்றதிகார [ஏகாதிபத்திய] த்தில் அடங்கியிருந்த எத்தனையோ சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் எவ்வகைப் போராட்டமும் இல்லாமல் படிப்படியாகத் தன்னுரிமை [சுதந்திரம்] பெற்று வருகின்றன. ஆனால் இலங்கையில் இன்று இருக்கின்ற சூழ்நிலையில் அரத்தம் சிந்தாமல் உரிமையை [சுதந்திரத்தை]ப் பெறுவோம் என்று நினைக்கவில்லை. தன்னுரிமையை [சுதந்திரத்தை]ப் பற்றிப் பேசிய உடனேயே நாங்கள் அரத்தம் சிந்தும்படி செய்யப்பட்டோம். அரத்தம் சிந்திக் கொண்டுதான் இருக்கின்றோம். எம் மக்கள் அரத்தம் சிந்தாமல் உரிமையை [சுதந்திரத்தை]ப் பெறுவார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. ஆனால் எங்களுடைய அரத்தத்தைத் தான் சிந்திக்கின்றோம். மற்றவர்களுடைய அரத்தத்தைச் சிந்தச் செய்யவில்லை, என்பதைத் தவிர வேறு எதையும் நான் கூறவில்லை.

[9] ஆசிரியர்: சரி மகிழ்ச்சி; அடுத்து, தந்தை செல்வாவின் காலத்துக்குள் தமிழ் ஈழம் கிடைக்கும் என்று ஒருவகையாக நம்பியிருந்தோம்: ஆனால் கிடைக்கவில்லை: இனி உங்கள் காலத்திற்குள்ளாவது தமிழ் ஈழத்தைக் காணுகின்ற வாய்ப்பைப் பெறுவோமா என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

அமிர்: தந்தை செல்வாவே கூறினார் தம்முடைய காலத்தில் தமிழ் ஈழம் கிடைக்காவிட்டாலும் என்னுடைய காலத்தில் தமிழ்ஈழம் கிடைக்கும் என்று, நானும் நம்புகிறேன். எங்களுடைய காலத்தில் உறுதியாகத் [நிச்சயம்] தமிழ்ஈழம் காண்போம் என்று.

[10] ஆசிரியர்: ஆகவே, நீங்கள் உங்களுடைய செயல்களிலே, கொள்கையிலேயே அதைக் கொண்டு செலுத்துகின்ற முறைகளிலே மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்றீர்கள் என்று நம்புகிறேன். சரி, தமிழீழம் பெற்றபின் உங்கள் ஆட்சி சிங்கள அரசுடன் எவ்வாறு அமைய வேண்டுமென்று விரும்புகின்றீர்கள்?

அமிர்: எங்களுடைய ஆட்சி சிங்கள அரசுடன் நட்புறவுடன் இயங்க வேண்டுமென்பது எங்களுடைய விருப்பம். ஏனென்றால், எமக்குப் பொதுவான பல பொருளியல் [பொருளாதார] நிலைச் சிக்கல் [பிரச்சனைகள்] உண்டு. இன்றைக்கு வங்காள தேசத்திற்கு இந்தியாவிற்கும் கங்கை நீரைப் பங்கிடுவதால் உள்ள சிக்கலைப் [பிரச்சனையை]ப் போன்ற பல சிக்கல் [பிரச்சனை]கள் இந்தத் தமிழீழத்துக்கும் சிங்கள நாட்டிற்கும் இடையில் உண்டு. ஆனபடியால் நட்புறவாக வாழவே நாம் விரும்புகின்றோம். அந்த நட்புறவு தமிழீழம் அமைந்த பின்பும் ஏற்படும் என்பதை நாம் நம்புகிறோம்.

[11] ஆசிரியர்: சரி, நீங்கள் விரும்பும் தமிழீழம் இப்போது குடியரசுத் தலைவர் சே. ஆர். செயவர்த்தனவிடம் இருந்தே கிடைக்கும் அல்லது அவர் காலத்திலேயே பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

அமிர்: இப்போது இருக்கின்ற குடியரசுத்தலைவர் எமக்குத் தமிழீழம் தருவார் என்று நான் நம்பவில்லை. அவர் தமிழ்மொழிக்குச் சில உரிமைகளையும் மேலும் சில அதிகாரங்களையும் மிகக் குறைவாகப் பரவாக்குகின்ற சில திட்டங்களையும் தந்து, தமிழ் மக்களை நிறைவு செய்துவிடப் பார்க்கின்றார்! அது, விடுதலைப் போரை ஒருவேளை வலுக்குறைத்து பலவீனப்படுத்தி விடுமோ என்று கூட நினைக்கவேண்டியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அவர் அளிக்க இருந்த உரிமைகளை நாம் கொடுத்தோம் என்று உலகின் முன்னிலையில் கூறப் படுவதற்கு நாம் இடம் அளிக்க விரும்பவில்லை. அதனால்தான் அவர் என்ன செய்கின்றார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என்று நாம் உலகத்துக்குக் கூறிக் கொண்டிருக்கின்றோம்.

[12] ஆசிரியர். தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் அரசு மீண்டும் நிறுவப் பெறுமானால் அவர் அரசு உங்களுக்கு அல்லது உங்கள் விடுதலை இளைஞருக்கு ஏதாவது ஒருவகையில் உதவுவார்கள் என நீங்கள் நம்புகிறீர்களா?

அமிர்: இன்று இருக்கின்ற அதிகாரங்களுடன் கூடிய தமிழக அரசு எதுவும் எமக்கு நேரடியாக உதவக்கூடிய நிலையில் இல்லை. ஆனால் வேறு எந்த அரசையும் பார்க்கக் கலைஞர் கருணாநிதியுடைய தலைமையிலான தமிழக அரசு ஈழத் தமிழர்களுக்கு இன உணர்வுடன் கூடிய இரக்கத்தை [அனுதாபத்தை]யும், ஆதரவையும் கொடுத்துத் தங்களால் இயன்றளவு உதவி செய்யும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

[13] ஆசிரியர்: மகிழ்ச்சி. ஒருகால் நீங்கள் நினைக்கும்படி தமிழக அரசிடமிருந்தோ, இந்திய அரசிடமிருந்தோ உங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு ஏதாவது உதவி கிடைக்கவில்லையானால் நீங்கள் தனித்து நின்றே உங்கள் நிலைமைகளைச் சமாளிக்கக் கூடிய வல்லமை உங்களுக்கு அல்லது இளைஞர்களுக்கு இருப்பதாக நீங்கள் நினைக்கின்றீர்களா? அல்லது வேறு ஏதாவது வல்லரசுகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொண்டுள்ளீர்களா?

அமிர்: நாங்கள் உலக நாடுகள் பலவற்றினுடைய இரக்கத்தை [அனுதாபத்தை]ப் பெறுவதற்கு எண்ணியுள்ளோம். ஆனால் அந்த நாடுகளின் நேரடித் தலையீடு ஏற்படவேண்டிய நிலைமை உண்டாகுமா, இல்லையா என்பதை நான் இப்போது கூற முடியாது. ஆனால் எந்த வகையிலாவது வங்காள தேசத்துக்கு விடுதலை இந்தியத் தலையீடு இன்றிக் கிடைத்து இருக்க முடியாது. அதே போலே தமிழீழத்தின் விடுதலைக்கு வேறு நாடுகளின் தலையீடு தேவை [அவசியம்] என்ற கட்டம் ஏற்படுமானால் நாம் அந்த உதவியைப் பெறுவதற்குப் பின் நிற்க மாட்டோம் என்று மட்டும் கூற முடியும். அதற்கு மேல் இப்பொழுது நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

(14) ஆசிரியர்: மிக்க மகிழ்ச்சி. இறுதியாக தென்மொழி வாயிலாகத் தமிழக மக்கள் நீங்கள் தருகின்ற செய்தி என்ன?

அமிர்: தமிழகமக்கள் நாலுகோடிக்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் இன்று வடநாட்டு ஆட்சியில் தம் உரிமை [சுதந்திரம்] அற்ற ஒரு நாட்டில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆயினும் ஈழம்வாழ் தமிழ் மக்கள் தமது அரத்தபாசமுள்ள உடன்பிறந்தவர் [சகோதரர்]களாக அவர்களை என்றும் கருதி அவர்களுடைய வாழ்வும் தமது வாழ்வும் என்றும் பிணைக்கப்பட்டிருப்பதாகவே கருதிக் கொண்டிருக்கின்றார்கள். பண்டைய ஈழத்தின் வரலாற்றை [சரித்திரத்தை] எடுத்துப் பார்ப்போமாயிருந்தால், தமிழகத்தினுடைய வரலாற்றோடு ஈழத் தமிழ்மக்களுடைய வரலாறும் பின்னிப் பிணைந்திருப்பதை நான் காணுகின்றேன். ஆனால், தமிழகம உரிமை [சுதந்திரம்] பெறுவதற்கு முன்பே தமிழீழம் விடுதலை பெறுமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு; அந்தத் தமிழீழத்தின் விடுதலையின் வாயிலாகத் தமிழகத்திற்கும் விடுதலை பிறக்க வழி வகுக்கப் படுமென்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியர்: சரி. மிக்க மகிழ்ச்சி. தாங்கள் அளித்த இந்தநேருரையைக்கு எங்களின் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வணக்கம். 0